அடையாறு, சென்னை-20.

உ

சிவமயம்.

# சிவவாக்கியர் பாடல்.

இஃது

திருமயிலை - வித்வான்

சண்முகம்பிள்ளை

அவர்களால்

பார்வையிடப்பட்டு,

வாலாஜாபேட்டை

சாமிசெட்டியாரவர்களால்,

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசண்ட் நகர், சென்னை-90

சென்னை

கலாரத்நாகரம்

என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1891.

*Copy right.*

இப்புத்தகம் சென்னை முத்தியாலுப்பேட்டையில் தம்பு செட்டித் தெருவில் கலாரத்நாகர வச்சுக்கூடத்திலும், மேற்படி தெருவில் 291 - வது கதவிலக்கமுள்ள வீட்டிலும், வேண்டுவோர் விலை அணா 4 - கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படி

வாலாஜாபேட்டை - சாமிசெட்டி.

சிவமயம்.

# சிவவாக்கியர் பாடல்.

### அக்ஷரநிலை.

ஆனவஞ்செழுத்துளே யண்டமு மகண்டமும்
ஆனவஞ்செழுத்துளே யாதியான மூவரும்
ஆனவஞ்செழுத்துளே யகாரமு மகாரமும்
ஆனவஞ்செழுத்துளே யடங்கலாவ லுற்றதே. (௧)

### சரியைவிலக்கல்.

ஓடியோடி யோடியோடி யுட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே. (௨)

### யோகநிலை.

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிராய்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே. (௩)

### சரியைகிரியைவிலக்கல்.

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுத்திவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ. (௪)

நீரையள்ளி நீரில்விட்டு நீநினைந்த காரியம்
ஆரையுன்னி நீரெலா மவத்திலே யிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெழுந்த
சீரையுன்னி வல்லிராய் சிவபதங்கள் சேரலாம். (௫)

### வேதநிலை.

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருத்த னத்தினால்
விடுவனோ வவனையின்னம் வெட்டவேணு மென்பனே
நடுவன்வந் தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்
சுடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரோ. (௬)

## ஞானநிலை.

என்னிலே யிருந்ததொன்றை யானறிந்த தில்லையே
என்னிலே யிருந்தவொன்றை யானறிந்து கொண்டபின்
என்னிலே யிருந்தவொன்றை யாவர்காண வல்லரோ
என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்து கொண்டனே. (எ)

நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையை
அனைத்துமா யகண்டமா யனாதிமுன் னனாதியாய்
எனக்குள்நீ யுனக்குள்நா னினைக்குமாற தெங்ஙனே. (அ)

மண்ணும்நீ விண்ணும்நீ மறுகடல்க ளேழும்நீ
எண்ணும்நீ யெழுத்தும்நீ யிசைந்தபண் ணெழுத்தும்நீ
கண்ணும்நீ மணியும்நீ கண்ணுளாடும் பாவைநீ
நண்ணுநீர்மை நின்றபாதம் நண்ணுமா றருளிடாய். (கூ)

அரியுமல்ல வயனுமல்ல வப்புறத்தி லப்புறம்
கருமைசெம்மை வெண்மையைக் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே. (க0)

அந்திகால முச்சிமூன்று மாடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களுந் தபங்களுஞ் செபங்களும்
சிந்தைமேவு ஞானமுந் தினஞ்செபிக்கு மந்திரம்
எந்தைராம ராமராம ராமவென்னு நாமமே. (கக)

கதாவுபஞ்ச பாதகங் களைத்துறந்த மந்திரம்
இதாமிதாம தல்லவென்று வைத்துழலு மேழைகாள்
சதாவிடாம லோதுவார் தமக்குநல்ல மந்திரம்
இதாமிதாமி ராமராம ராமவென்னும் நாமமே. (கஉ)

நானதேது நீயதேது நடுவினின்ற தேதடா
கோனதேது குருவதேது கூறிடுங் குலாமரோ
ஆனதேது வழிவதேது வப்புறத்தி லப்புறம்
ஈனதேது ராமராம ராமவென்ற நாமமே. (கங)

## யோகநிலை.

சாத்திரங்க ளோதுகின்ற சட்டநாத பட்டரோ
வேத்திரைப்பு வந்தபோது வேதம்வந் துதவுமோ
மாத்திரைப்போ தும்முளே மறித்துதொக்க வல்லிராய்
சாத்திரப்பை நோய்களோது சத்திமுத்தி சித்தியே. (கச)

## ஞானநிலை.

தூரந்தூரந் தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும்விண்ணு மெங்குமாய் பரந்தவிப்ப ராபரம்
ஊருநாடு காடுதேடி யுழன்றுதேடு மூடரே
நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே. (கரு)

## யோகநிலை.

நாலுவேத மோதுவீர் ஞானபாத மறிகிலீர்
பாலுநெய் கலந்தவாறு பாவிகா ளறிகிலீர்
ஆலமுண்ட கண்டனா ரகத்துளே யிருக்கவே
காலனென்று சொல்லுவீர் கனவிலும்ம தில்லையே. (கசா)

விந்திலாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைந்தவாறு தெங்ஙனே
பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்
சிந்திலாத போதுசீவ னில்லையில்லை யில்லையே. (கஎ)

அஞ்சுமூன்று மெட்டதாய யாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்துகொண்டு நூறுருச் செபிப்பராய்
பஞ்சமான பாதகங்க ளூறுகோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே. (கஅ)

அண்டவாச லாயிரம்ப்ர சண்டவாச லாயிரம்
ஆறிரண்டு நூறுகோடி யானவாச லாயிரம்
இந்தவாச லேழைவாச லேகபோக மானவாசல்
எம்பிரா னிருக்கும்வாசல் யாவர்காண வல்லரே. (கசு)

சாமநாலு வேதமும் சகலசாத் திரங்களும்
சேமமோத வோதிலுஞ் சிவனைநீ ரறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே யுணர்ந்தபின்
ஊனமற்ற காயமா யிருப்பனெங்க ளீசனே. (உ0)

சங்கிரண்டு தாரையொன்று சன்னபின்ன லாகையால்
மங்கிமாளு தேயுலகில் மானிடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்ந்து தாரையூத வல்லிராய்
கொங்கைமங்கை பங்கரோடு கூடிவாழ லாகுமே. (உக)

## ஞானநிலை.

தங்கமொன்று ரூபம்வேறு தன்மையான வாறுபோல்
செங்கண்மாலு மீசனுஞ் சிறந்திருந்த தெம்முளே
விங்களங்கள் பேசுவார் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்றநாமம் நாமமிந்த நாமமே. (உஉ)

## சிவவாக்கியர் பாடல்.

### யோகநிலை.

அஞ்செழுத்தி லேபிறந்து அஞ்செழுத்தி லேவளர்ந்து
அஞ்செழுத்தை யோதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தி லோரெழுத் தறிந்துகூற வல்லிரால்
அஞ்சலஞ்ச லென்றுநாத ரம்பலத்தி லாடுமே. (உ௩)

அஞ்சுமஞ்சு மஞ்சுமே யனாதியான தஞ்சுமே
பிஞ்சுபிஞ்சு தல்லவோ பித்தர்காள் பிதற்றுறீர்
நெஞ்சிலஞ்சு கொண்டுநீர் நின்றுநெருக்க வல்லிராய்
அஞ்சுமில்லை யாறுமில் லனாதியான தோன்றுமே. (உ௪)

நீளவீடு கட்டுநீர் நெடுங்கதவு சாத்துநீர்
வாழவேணு மென்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரோ
காலனோலை வந்தபோது கைகலந்து நின்றிடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே. (உ௫)

### கிரியைநிலை.

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையி லோலைவந் தழைத்திடில்
ஓடுபெற்ற தவ்விலை பொருதுகாணு மிவ்வுடல். (உ௬)

### யோகநிலை.

ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமு முடைந்தபோது வொப்பிலாத வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே (உ௭)

### உற்பத்திநிலை.

அண்ணலே யனாதியே யனாதிமுன் னனாதியே
பெண்ணுமாணு மொன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணிலாணி சுக்கிலங் கருதியோங்கு நாளிலே
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனே. (உ௮)

### ஞானநிலை.

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
மிண்டராய்த் திரிந்தபோ திறைத்தநீர்க ளெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை
அண்டர்கோ னிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகாள்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே. (உ௯)

### யோகநிலை.

நெருப்பைமூட்டி நெய்யைவிட்டு நித்தநித்த நீரிலே
விருப்பமோடு நீர்குளிக்கும் வேதவாக்யங் கேளுமின்
நெருப்புநீரு மும்முளே நினைந்துகூற வல்லிராய்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே. (௬0)

பாட்டிலாத பரமனை பரமலோக நாதனை
நாட்டிலாத நாதனை நாரிபங்கர் பாகனை
கூட்டிமெள்ள வாய்புதைத்து குணுகுணுத்த மந்திரம்
வேட்டகாரர் குசுகுசுப்பை கூப்பிடா முகிஞ்சதே. (௬௧)

### தரிசனம்.

செய்யதெங்கி லேயிளநீர் சேர்ந்தகார ணங்கள்போல்
ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில் கொண்டனன்
ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர்முன்னம் வாய்திறப்ப தில்லையே. (௬௨)

### சரிதைநிலை.

மாறுபட்டு மணிதுலக்கி வண்டினெச்சில் கொண்டுபோய்
ஊறுபட்ட கல்லின்மீதே யூற்றுகின்ற மூடரே
மாறுபட்ட தேவரு மறிந்துநோக்கு மென்னையும்
கூறுபட்டு தீர்க்கவோ குருக்கள்பாதம் வைத்ததே. (௬௩)

### யோகநிலை.

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலுங் குளங்களுங் கும்பிடுங் குலாமரே
கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே
ஆவது மழிவது மில்லையில்லை யில்லையே. (௬௪)

செங்கலுங் கருங்கலுஞ் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலே திராவிலுஞ் சிவனிருப்ப னென்கிறீர்
உம்பத மறிந்துநீ ரும்மைநீ ரறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாத ராடல்பாட லாகுமே. (௬௫)

### கிரியைநிலை.

பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ வனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே. (௬௬)

### ஞானநிலை.

இருக்குநாலு வேதமு மெழுத்தையற வோதிலும்
பெருக்கநீறு பூசிலும் பிதற்றிலும் பிரானிரான்
உருக்கிநெஞ்சை யுட்கலந்து வுண்மைகூற வல்லிராய்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே. (௬௭)

இல்லைநா யகனவன் இருவரங் கனுமவன்
எல்லையான புவனமு மேகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரோ. (ருரு)

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழுந்த வச்சுடர்
சித்தமுந் தெளிந்துவேத கோயிலுந் திறந்தபின்
அத்தனாடல் கண்டபின் னடங்கலாடல் காணுமே. (ருசா)

உற்றநூல்க ளும்முளே யுணர்ந்துணர்ந்து பாடுவீர்
பற்றறுத்து நின்றுநீர் பராபரங்க ளெய்திலீர்
செற்றமாவை யுள்ளறைச் செருக்கறுத் திருத்திடில்
சுற்றமாவு மும்முளே சோதியென்று வாழுமே. (ருஎ)

போதடா வெழுந்ததும் புனலதாகி வந்ததும்
தாதடா புகுந்ததும் தானடா விளைந்ததும்
ஓதடா வஞ்சுமூன்று மொன்றதான வக்கரம்
ஓதடா விராமராம ராமமென்னு நாமமே. (ருஅ)

அகாரமென்ற வக்கரத்து ளவ்வுவந் துதித்ததோ
உகாரமென்ற வக்கரத்தி லுவ்வுவந் துதித்ததோ
அகாரமும் உகாரமுஞ் சிகாரமன்றி நின்றதோ
விகாரமற்ற யோகிகாள் விரித்துரைக்க வேணுமே. (ருகூ)

அறத்திறங்க ளுக்குநீ யகண்டமெண் டிசைகளும்நீ
திறத்திறங்க ளுக்குநீ தேடுவார்கள் சிந்தைநீ
உறக்கம்நீ யுணர்வுநீ யுட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல் மறப்பிலுங் குடிகொளே. (சா0)

அண்டம்நீ யகண்டம்நீ யாதிமூல மானநீ
கண்டம்நீ கருத்துநீ காவியங்க ளானநீ
புண்டரீக மற்றுளே புணருகின்ற புண்ணியர்
கொண்டகோல மானநேர்மை கூர்மையென்ன கூர்மையே. (சாக)

மையடர்ந்த கண்ணினார் மயக்கிலே மயக்கிலே
மையிறந்து கொண்டுநீங்க ளல்லலற் றிருப்பிர்காள்
மெய்யடர்ந்த சிந்தையால் விளங்குஞான மெய்தினால்
உய்யடர்ந்து கொண்டுநீங்க ளூழிகாலம் வாழ்விரே. (சாஉ)

கருவிருந்த வாசலாற் கலங்குகின்ற வூமைகாள்
குருவிருந்து சொன்னவார்த்தை குறித்துநோக்க வல்லிராய்
உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றுநீ
திருவிலங்கு மேனியாக சென்றுகூட லாகுமே. (சாங)

தீர்த்தமாட வேணுமென்று தேடுகின்ற தீனர்காள்
தீர்த்தமாட லெவ்விடந் தெளிந்துநீ ரியம்பிலீர்
தீர்த்தமாக வும்முளே தெளிந்துநீ ரிருந்தபின்
தீர்த்தமாக வுள்ளதுஞ் சிவாயவஞ் செழுத்துமே. (௬௪)

கழுத்தையும் நிமிர்த்திநல்ல கண்ணையும் விழித்துநீர்
பழுத்துவாய் விழுந்துபோன பாவமென்ன பாவமே
அழுத்தமான வித்திலே யனாதியா யிருப்பதோர்
எழுத்திலோ ரெழுத்திலே யிருக்கலா மிருத்துமே. (௬௫)

கண்டுநின்ற மாயையுங் கலந்துநின்ற பூதமும்
உண்டுறங்கு மாறுநீ ருணர்ந்திருக்க வல்லிராய்
பண்டையாறு மொன்றுமாய்ப் பயந்தவேத சுத்தனைப்
அண்டமுத்தி யாகிநின்ற வாதிமூல மூலமே (௬௬)

ஈன்றவாச லுக்கிரங்கி யெண்ணிறந்து போவிர்காள்
கான்றவாழை மொட்டலர்ந்த காரண மறிகிலீர்
நான்றவாச லைத்திறந்து நாடிநோக்க வல்லிராய்
தோன்றுமாயை விட்டொழிந்து சோதிவந்து தோன்றுமே. ( )

உழலும்வாச லுக்கிரங்கி யூசலாடு மூமைகாள்
உழலும்வாச லைத்திறந்து வுண்மைசேர வெண்ணிலீர்
உழலும்வாச லைத்திறந்து வுண்மைநீ ருணர்ந்தபின்
உழலும்வாச லுள்ளிருந்த வுண்மைதானு மாவிரோ (௬௮)

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாடிநாடி யும்முளே நாழிகை யிருந்தபின்
பாலனாகி வாழலாம் பறந்துபோக யாசையும்
ஆலமுண்ட கண்டராணை யம்மையாணை யுண்மையே. (௬௯)

இருக்கவேணு மென்றபோ திருக்கலா யிருக்குமோ
மறிக்கவேணு மென்றலோ மண்ணுளே படைத்தனர்
சுருக்கமற்ற தம்பிரான் சொன்னவஞ் செழுத்தையும்
மறிக்குமுன் வணங்கிடீர் மருந்தெனப் பதங்கெடீர். (௭0)

அம்பத்தொன்றி லக்கர மடங்கலோ ரெழுத்துமோ
விண்பரந்த மந்திரம் வேதநான்கு மொன்றலோ
விண்பரந்த மூலவஞ் செழுத்துளே முளைத்ததே
அங்கலிங்க பீடமா யமர்ந்ததே சிவாயமே. (௭௧)

சிவாயவென்ற வக்ஷரஞ் சிவனிருக்கு மக்ஷரம்
உபாயமென்று நம்புதற்கு உண்மையான வக்ஷரம்
கபாடமற்ற வாசலைக் கடந்துபோன வாயுவை
உபாயமிட் டழைக்குமே சிவாயவஞ் செழுத்துமே. (௭௨

உருவுமல்ல வெளியுமல்ல வொன்றைமேவி நின்றதல்ல
மருவுவாசல் சொந்தமல்ல மற்றதல்ல வற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசலான தானுமல்ல
உரியதாகி நின்றநேர்மை யாவர்காண வல்லரே. (௭௩)

ஆத்துமா வனாதியோ வாத்துமா வனாதியோ
பூத்திருந்த ஐம்பொறி புலன்களு மனாதியோ
தாக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மனாதியோ
வீக்கவந்த யோகிகள் விரித்துரைக்க வேணுமே. (௭௪)

அறிவிலே பிறந்திருந் தாகமங்க ளோதுநீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மையொன் றறிகிலீர்
உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடும்
அறிவிலாத மாந்தரோ டணுகுமாறு தெங்ஙனே. (௭௫)

இருவரங்க மும்பொருந்தி யென்புருகி நோக்கிலீர்
உருவரங்க மாகிநின்ற வுண்மையொன்றை யோர்கிலீர்
கருவரங்க மாகிநின்ற கற்பனை கடந்தபின்
திருவரங்க மென்றுநீர் தெளிந்திருக்க வல்லிரே. (௭௬)

கருக்குழியி லாசையாய்க் காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடுக்கு மேழைகாள் குலாவுகின்ற பாவிகாள்
திருத்திருத்தி மெய்யினாற் சிவந்தவஞ் செழுத்தையும்
உருக்கழிக்கு மும்மையு முணர்ந்துணர்ந்து கொள்ளுமே. (௭௭)

மண்ணிலே பிறக்கவும் வழக்கலா துரைக்கவும்
எண்ணிலாத கோடிதேவ ரென்னதுன்ன மென்னவும்
கண்ணிலே மணியிருக்க கண்மறைந்த வாறுபோல்
எண்ணில்கோடி தேவரு மிதன்கணே விழிப்பதே. (௭௮)

மண்கலங் கவிழ்ந்தபோது வைத்துவைத் தடுக்குவார்
வெங்கலங் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவார்
நங்கலங் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்து நின்றமாய மென்னமாய மீசனே. (௭௯)

மிக்கசெல்வ நீபடைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவ தறிகிலீர்
மக்கள்பெண்டிர் சுற்றமென்று மாயைகாணு மிவையெலாம்
மறலிவந் தழைத்தபோது வந்துகூட லாகுமோ. (௮0)

ஓக்கவந்து மாதுடன் செறிந்திடத்தி லழகியே
ஒருவராகி யிருவராகி யிளமைபெற்ற வூரிலே
அக்கணிந்து கொன்றைசூடு மம்பலத்தி லாடுவார்
அஞ்செழுத்தை யோதிடி னனேகபாவ மகலுமே. (௮௧)

மாடுகன்று செல்வமு மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளி கைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந் துயிர்கழன்ற வுண்மைகண்டு முணர்கிலீர். (அஉ)

பாடுகின்ற துப்பருக்கண் தங்களுக் கருகியே
பழுதிலாத கன்மகூட்ட மிட்டவெஞ்சன் பரமனே
நீதிசெம்பொ னம்பலந்த ளாடுகொண்ட வப்பனே
நீலகண்ட காளகண்ட நித்யகல்லி யாணனே. (அங)

நாணமற்ற காட்டகத்தி லேவெந்தெழுந்த நீறுபோல்
ஞானமுற்ற நெஞ்சகத்தில் வல்லதேது மில்லையே
ஊனமற்ற சோதியோ டுணர்வுசேர்ந் தடக்கினால்
தேனகத்தி னூறல்போல தெளிந்ததே சிவாயமே. (அச)

பருகியோடி யும்முளே பறந்துவந்த வெளிதனை
நிரவியே நினைந்துபார்க்கில் நின்மலம தாகுமே
உருகியோடி யெங்குமாய மாயசோதி தன்னுளே
கருதடா வுனக்குநல்ல காரணம தாகுமே. (அரு)

சோதிபாதி யாகிநின்ற சுத்தமும் பலித்துவந்து
போதியாத போதகத்தை யோதுகின்ற பூரணா
வீதியாக வோடிவந்து விண்ணடியி னூடுபோய்
ஆதிநாத னாதனென் றனந்தகால முள்ளதே. (அசா)

இறைவனா லெடுத்தமாட தில்லையம் பலத்திலே
அறிவினா லெடுத்தபாட் டிச்சினா லயர்ந்ததே
கருவிநாத முண்டுபோய கழன்றவாச லொன்பதும்
ஒருவரா யொருவர்கோடி யுள்ளுளே யமர்ந்ததே. (அஎ)

நெஞ்சிலே யிருந்திருந்து நெருக்கியோடும் வாயுவை
அன்பினா லிருந்துநீ யருகிருத்த வல்லிராய்
அன்பர்கோயில் காணலா மகன்றுமெண் டிசைக்குளே
தும்பியோடி யோடியே சொல்லடா சுவாமியே. (அஅ)

தில்லையை வணங்கிநின்று தெண்டனிட்ட வாயுவை
எல்லையைக் கடந்துநின்று ஏகபோக மாய்கையோ
வெல்லையைக் கடந்துநின்று சொர்க்கலோக வெளியிலே
வெள்ளையுஞ் சிவப்புமாகி மெய்கலந்து நின்றதே. (அகூ)

உடம்புயி ரெடுத்ததோ வுயிருடம் பெடுத்ததோ
உடம்புயி ரெடுத்தபோ துருவமேது செப்புவீர்
உடம்புயி ரிறந்துபோ யுயிரிறப்ப தில்லையே
உடம்புமெய் மறந்துகண் டுணர்ந்துஞான மோதுமே. (கூ0)

அவ்வெனு மெழுத்தினா லகண்டமேழு மாகினாய்
உவ்வெனு மெழுத்தினா லுருத்தரித்து நின்றனை
மவ்வெனு மெழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வுமுவ்வும் மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே. (சுக)

மந்திரங்க ளுண்டுநீர் மயங்குகின்ற மானிடர்
மந்திரங்க ளாவது மரத்திலூற லன்றுகாண்
மந்திரங்க ளாவது மதத்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மானமேது மில்லையே. (சுஉ)

என்னவென்று சொல்லுவே னிலக்கணமி லாததைப்
பன்னுகின்ற செந்தமிழ்ப் பதங்கடந்த பண்பனை
மின்னகத்தில் மின்னொடுங்கு மின்னலான வாறுபோல்
என்னகத்து ளீசனும் யானுமல்ல தில்லையே. (சுங)

ஆலவித்தி லாலொடுங்கி யாலமான வாறுபோல
வேறுவித்து மின்றியே விளைந்துபோக மெய்தினீர்
ஆறுவித்தை யோர்கிலீ ரறிவிலாத மாந்தரே
பாருமித்தை யும்முளே பரப்பிரம மானதே. (சுச)

அவ்வுதித்த மந்திர மகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத் தறிந்தவர்க் கெழுப்பிறப்ப திங்கிலை
சவ்வுதித்த மந்திரத்தைத் தற்பரத் திருத்தினால்
அவ்வுமுவ்வு மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே. (சுரு)

நவ்விரண்டு காலதா யிரண்டுமவ் வுயிரதாய்
சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதா யெழுந்துநின்ற நேர்மையிற்
செவ்வையொன்று நின்றதே சிவாயமஞ் செழுத்துமே. (சுசா)

இரண்டுமொன்று மூலமா யியங்குசக் கரத்துளே
சுருண்டுமூன்று வளையமாய்ச் சுணங்குபோற் கிடந்ததீ
முரண்டெழுந்த சங்கினோசை மூலநாடி யூடுபோய்
அரங்கன்பட் டணத்திலே யமர்ந்ததே சிவாயமே. (சுஎ)

கடலிலே திரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்
மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்க சோதியை
உடலுளே நினைந்துநல்ல வுண்மையான வுண்மையே. (சுஅ)

மூன்றுமண் டலத்தினு முட்டிநின்ற தூணிலும்
மூன்றுபாம்பின் வாயிலும் நவின்றெழுந்த தீதுகம்
ஈன்றதாயு மப்பரு மெடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோ ரெழுத்துளே சொல்லவெங்கு மில்லையே. (சுசு)

மூன்றுமூன்று மூன்றுமே மூவர்தேவர் தேடிடும்
மூன்றுமஞ் செழுத்துமாய் முழங்குமவ் வெழுத்துளே
ஈன்றதாயு மப்பனு மியங்குகின்ற நாதமும்
தோன்றுமண் டலத்திலே சொல்லவெங்கு தில்லையே. (க00)

சோறுகின்ற பூதம்போற் சுணங்குபோற் கிடந்தநீ
நாறுகின்ற கும்பியி லவின்றெழுந்த மூடரே
சீறுகின்ற வைவரை சிணுங்கறுக்க வல்லிராய்
ஆறுகோடி வேணியா ராறிலொன்றி லாவரோ (க0க)

வட்டமென்று வும்முளே மயங்கிவிட்ட திவ்வெளி
அட்டரக் கரத்துளே யடங்கமு மெய்யடுக்குமும்
எட்டுமெட்டு மெட்டுமா யியங்குசக் கரத்துளே
எட்டவாமு திந்தநந்தம் பிரானை நா னறிந்தபின். (க0உ)

பேசுவானு மீசனே பிரமஞான மும்முளே
ஆசையான வைவரு மலைந்தலைந்து மெய்ப்பிறர்
ஆசையான வைவரை யடக்கியே யெழுந்தமேல்
பேசிடா திருப்பராய் நாதனா மெந்நாளிருமையே. (க0ங)

நமசிவாய வஞ்செழுந்தும் நிற்குமே நிலைபெறும்
நமசிவாய மஞ்சுமஞ்சும் புராணமான மாயையாம்
நமசிவாய மஞ்செழுத்தும் நம்முளே யிருக்கவே
நமசிவாய வுண்மையை நற்குணமெய்ய நாதனே. (க0ச)

பரமுனக் கெனக்குவேறு பயமிலை பராபரா
கரமெடுத்து நிற்றலுங் குவிந்திடக் கடப்படா
சிரமுருகி யமுதளித்த சீருலாவு நாதனே
வரமெனக்கு நீயளித்த ஓமநமசி வாயமே. (க0ரு)

பச்சைமண் பதுப்பிலே பழுப்பநிந்த வேட்டுவன்
நித்தமும் நினைந்திட நினைந்தவண்ண மாயிடும்
பச்சைமண் ணிடிந்துபோய் பரந்ததும்பி யாயிடும்
பித்தர்கா ளறிந்துகொள் பிரானிருந்த கோலமே. (க0சா)

ஒளியதான காசிமீது வந்துதங்கு வோர்க்கெலாம்
வெளியதான சோதிமேனி விசுவநாத னானவன்
தெளியுமங்கை யுடனிருந்து செப்புகின்ற தாரகம்
வெளியசோரி ராமராம நாமமிந்த நாமமே. (க0எ)

விழியினோடு புனல்விளைந்த வில்லவல்லி யோனியும்
வெளியிலே பிதற்றலாம் விளைவுநின்ற தில்லையே
வெளிபரந்த தேசமும் வெளிக்குள்மூல வித்தையும்
தெளியும்வல்ல ஞானிகள் தெளிந்திருத்தல் திண்ணமே. (க0அ)

ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்துபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே யுட்கலந்து நிற்குமே. (௧0௯)

அல்லல்வாச லொன்பது மறுத்தடைந்த வாசலும்
சொல்லும்வாச லோரைந்து சொம்மிவிம்மி நின்றது
நல்லவாச லைத்திறந்து ஞானவாச வீடுபோய்
எல்லைவாசல் கண்டவ ரினிபிறப்ப தில்லையே. (௧௧0)

ஆதியான தொன்றுமே யனேகனேக ரூபமாய்
சாதிபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆவியோடு ஆடுகின்ற மீண்டுமிந்த சென்மமாம்
சோதியான ஞானியர்க்குஞ் சுத்தமா யிருப்பனே. (௧௧௧)

மலர்ந்ததாது மூலமாய் வையக மலர்ந்தபூ
குவிந்தது மயக்கம்வந் தெடுத்ததும் விடுந்ததும்
புலன்களைந்தும் பொறிகலங்கி பூமிமேல் விழுந்ததும்
இனங்கலங்கி நின்றமாய மென்னமாய மீசனே (௧௧௨)

பாரடங்க வுள்ளதும் பரந்தவானை முள்ளதும்
ஓரிடமு மன்றியே யொன்றிநின்ற வொண்சுடா
ஆரிடமு மன்றியே யகத்துளும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவர் சிவன்தெரிந்த ஞானியே (௧௧௩)

மண்கிடார மேசுமந்து மலையுமேறி மறுகுறீர்
எண்படாத காரியங்க ளியலுமென்று கூறுநீர்
தம்பிரானை நாள்கடோறுந் தரையிலே தலைபடக்
கும்பிடாத மாந்தரோடு கூடிவாழ்வ தெங்ஙனே. (௧௧௪)

நாவிநூ லழிந்ததும் நலங்குல மழிந்ததும்
மேவுதே ரழிந்ததும் விசாரமுங் குறைந்ததும
பாவிகாளி தென்னமாயம் வாமநாடு பூசலாய்
ஆவியா ரடங்கினு லைவரு மடங்குவார். (௧௧௫)

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்
நாடுபெற்ற நண்பர்கையி லோலைவந் தழைத்தபோது
ஆடுபெற்ற தவ்விலை பெறாதுகாணு மிவ்வுடல். (௧௧௬)

இல்லைஇல்லை யென்றுநீ ரியம்புகின்ற வேழைகாள்
இல்லையென்று நின்றதொன்றை யில்லையென்ன லாகுமோ
இல்லையல்ல வொன்றுமல்ல யிரண்டுமொன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டபே ரினிப்பிறப்ப தில்லையே. (௧௧௭)

காரகார காரகார காவலூழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களேழு மெய்தசீ
ராமராம ராமராம நாமமென்று நாமமே. (ககஅ)

நீடுபாரி லேபிறந்து நேயமான காயந்தான்
வீடுவேறி தென்றபோது வேண்டியின்பம் வேண்டுமோ
பாடிநாலு வேதமும் பாரிலே படர்ந்ததோ
ரோடுராம ராமராம நாமமென்று நாமமே. (ககசு)

உயிருநன்மை யாலுட லெடுந்துவந் திருந்திடும்
உயிருடம் பொழிந்தபோது ரூபரூப மாயிடும்
உயிர்சிவந்தின் மாய்கையாகி யொன்றையொன்று கொன்றிடும்
உயிருசத்தி மாய்கையாகி யொன்றையொன்று தின்னுமே. (கஉ0)

நெட்டெழுந்து வட்டமோ நிறைந்தபல்லி யோனியும்
நெட்டெழுந்தில் வட்டமொன்று நின்றதொன்று கண்டிலேன்
குட்டெழுந்தி லந்தநன்று கொம்புகால் குறித்திடி
னெட்டெழுந்தில் வட்டமொன்றில் நேர்படான மீசனே. ( )

விண்ணிலுள்ள தேவர்க ளறியொணாத மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்துநின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரு மெம்முளே யமர்ந்துவாழ்வ துண்மையே. (கஉஉ)

விண்கடந்து நின்றசோதி மேலைவாசலைத் திறந்து
கண்களித்த வுள்ளுருளே கலந்துபுக் கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமு மறந்துபோய்
எண்கலந்த வீசனோ டிசைந்திருப்ப துண்மையே. (கஉங)

மூலமான மூச்சதில் மூச்சறிந்து விட்டபின்
நாலுநாளு மூன்னிலொரு நாட்டமாகி நாட்டிடில்
பாலனாகி நீடலாம் பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட கண்டராணை யம்மையாணை யுண்மையே. (கஉச)

மின்னெழுந்து மின்பரந்து மின்னொடுங்கும் வாறுபோல்
என்னுள்நின்ற வென்னுளீச னென்னுளே யடங்குமே
கண்ணிணின்ற கண்ணில்நேர்மை கண்ணறிவி லாமையாய்
என்னுணின்ற வென்னைநா னியானறிந்த தில்லையே. (கஉரு)

இருக்கலா மிருக்கலா மவனிலே யிருக்கலாம்
அரிக்குமால் பிரமனு மகண்டமேழ் கத்தலாம்
கருக்கொளாத குழியிலே காலிடாத கண்ணிலே
நெருப்பறை திறந்தபின்பு நீயும்நானு மீசனே. (கஉசு)

ஏகபோக மாகிய விருவரு மொருவராய்
போகமும் புணர்ச்சியும் பொருந்துமாற தெங்ஙனே
ஆகிலு மழுகிலு மதங்கணைய தானபின்
சாகிலும் பிறக்கிலு மில்லையில்லை யில்லையே. (கஉஎ)

வேதனாலு பூதமாய் விரவுமங்கி நீரதாய்
பாதமேயி லிங்கமாய்ப் பரிந்துபூசை பண்ணினால்
காதில்நின்று கடைதிறந்து கட்டறுத்த ஞானிகள்
ஆதியந்த முங்கடந் தரியவீ தாருமே (கஉஅ)

பருத்திநூல் முரிச்கியிட்டு பஞ்சியோது மாந்தரே
துருத்திநூல் முரிக்கியிட்டு துன்பநீங்க வல்லிராய்
கருத்திநூல் கலைப்படுங் கால நூல கழிந்திடும்
திருத்திநூல் காவருஞ் சிவாயவஞ் செழுத்துமே (சஉகூ)

சாவதான தத்துவச் சடங்குசெய்யு மூமைகாள்
தேவர்கல்லு மாவரோ சிரிப்பதன்றி யென்செய்வேன்
மூவராலு மறியொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாக வும்முளே [illegible] கிருப்பன் காணுமே (கஙo)

காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே கிடந்த தேரை யென்பெறும்
காலமே யெழுந்திருந்து கண்கள்மூன்றி லொன்றையும்
மூலமே நினைந்திராகில் முத்திசித்தி யாகுமே (கஙக)

எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ
இங்குமங்கு மாயிரண்டு தேவரோ யிருப்பரோ
அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுந்து மாள்வரோ (கஙஉ)

இறையறை யிடைக்கிட வன்றுதூமை யென்கிறீர்
முறையறிந்து பிறந்தபோது மன்றுதூமை யென்கிறீர்
துறையறிந்து நீர்குளிர்ந்தா லன்றுதூமை யென்கிறீர்
பொறையிலாத நீசரோடும் பொருந்துமாற தெங்ஙனே (கஙங)

சத்தம்வந்த வெளியிலே சலமிருந்து வந்ததும்
மத்தமாகி நீரிலேது வண்டுமூழ்கு மூடரே
சுத்தமேது சுட்டதேது தூய்மைகண்டு நின்றதேது
பித்தர்காய முற்றதேது பேதமேது போதமே. (கஙச)

மாதமாதந் தூய்மைதான் மறந்துபோன தூய்மைதான்
மாதமற்று நின்றல்லோ வளர்ந்துரூப மானது
நாதமேது வேதமேது நற்குலங்க ளேதடா
வேதமோதும் வேதியர் விளைந்தவாறும் பேசடா (கஙரு)

தூமையற்று நின்றல்லோ சுதீபமற்று நின்றது
ஆண்மையற்று நின்றல்லோ வழக்கமற்று நின்றது
தாண்மையற்று ஆண்மையற்று சஞ்சலங்க ளற்றுநின்ற
தூமைதூமை யற்றகாலஞ் சொல்லுமற்று நின்றதே. (௧௩௬)

ஊறிநின்ற தூமையை யுறைந்துநின்ற சீவனை
வேறுபேசி மூடரோ விளைந்தவாற தேதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன
சீறுகின்ற மூடரோயத் தூமைநின்ற கோலமே. (௧௩௭)

தூமைகண்டு நின்றபெண்ணின் தூமைதானு மூறியே
சீமையெங்கு மாணும்பெண்ணும் சேர்ந்துலகங் கண்டதே
தூமைதானும் ஆசையாய்த் துறந்திருந்த சீவனை
தூமையற்று கொண்டிருந்த தேசமேது தேசமே. (௧௩௮)

வேணும்வேணு மென்றுநீர் வீணுழன்று தேடுவீர்
வேணுமென்று தேடினாலு முள்ளதல்ல தில்லையே
வேணுமென்று தேடுகின்ற வேட்கையைத் திறந்தபின்
வேணுமென்ற வப்பொருள் விரைந்துகாண லாகுமே. (௧௩௯)

சிட்டரோது வேதமுஞ் சிறந்தவாக மங்களும்
நட்ட நார ணங்களும் நவின்றமெய்மை நூல்களும்
கட்டிவைத்த போதகங் கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிராணயா மறிந்தபின். (௧௪௦)

நூறுகோடி யாகமங்கள் நூறுகோடி மந்திரம்
நூறுகோடி நாளிருந்து யோதினு லதென்பயன்
ஆறுமாறு மாறுமா யகத்திலோ ரெழுத்துமாய்
ஏறுசீ ரெழுத்தையோத வீசன்வந்து பேசுமே. (௧௪௧)

காலைமாலை தம்மிலே கலந்துநின்ற காலனார்
மாலைகாலை யாய்ச்சிவந்த மாயமேது செப்பிடீர்
காலைமாலை யற்றுநீர் கருத்திலே யொடுங்கினால்
காலைமாலை யாகிநின்ற காலனில்லை யில்லையே. (௧௪௨)

எட்டுமண்ட லத்துளே யிரண்டுமண்ட லம்வளைத்து
இட்டமண்ட லத்துளே யெண்ணியாறு மண்டலம்
தொட்டமண்ட லத்திலே தோன்றிமூன்று மண்டலம்
நட்டமண்ட லத்துளே நாதனாடி நின்றதே. (௧௪௩)

நாலிரண்டு மண்டலத்துள் நாதனின்ற தெவ்விடம்
காலிரண்டு மூலநாடி கண்டதங் குருத்திரன்
சேரிரண்டு கண்கலந்து திசைகளெட்டு மூடியே
மேலிரண்டு தான்கலந்து வீசியாடி நின்றதே. (௧௪௪)

அம்மையப்ப னப்புநீ யறிந்ததே யறிகிலீர்
அம்மையப்ப னப்புநீ ரரியய னரனுமாய்
அம்மையப்ப னப்புநீ ராதியாதி யானபின்
அம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானதே. (௧௪௫)

உருத்தரிப்ப தற்குமுன் னுடல்கலந்த தெங்ஙனே
கருத்தரிப்ப தற்குமுன் காரணங்க ளெங்ஙனே
பொருத்திவைத்த போதரும் பொருந்துமாற தெங்ஙனே
குருத்திருத்தி வைத்தசொல் குறித்துணர்ந்து கொள்ளுமே ( )

ஆதியுண்டு வந்தமில்லை யன்றுநாலு வேதமில்
சோதியுண்டு சொல்லுமில்லை சொல்லிறந்த தேதுமில்லை
ஆதியான மூவரி லமர்ந்திருந்த வாயுவும்
ஆதியன்று தன்னையு மாறிவ ரண்ணலே. (௧௪௭)

புலால்புலால் புலாலதென்று பேதமைகள் பேசுறீர்
புலாலைவிட்டு மெய்பிரான் பிரிந்திருந்த தெங்ஙனே
புலாலுமாய்ப் பிதற்றுமாய்ப் பெருலாவுந் தானுமாய்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தர்கா ணுடம்பதே. (௧௪௮)

உதிரமான பால்குடித் தொச்சநீ வளர்ந்ததும்
இரதமா யிருந்ததொன்றி ரண்டுபட்ட தெங்கலாய்
மதிரமாக விட்டதேது மாங்கிசப் புலாலென்று
சதிரமாய் வளர்ந்ததேது சைவரான மூடரே. (௧௪௯)

உண்டகல்லை யெச்சிலென் றுள்ளெறிந்து போடுறீர்
பண்டுமெச்சில் லையல்லவோ பரமனுக்கு மேறுமோ
கண்டவெச்சில் கேளடா கலந்தபாணி யப்பிலே
கொண்டசுத்த மேதடா குறிப்பிலாத மூடரே (௧௫௦)

ஓதிவைத்த நூல்களு [illegible]
மாதுமக்கள் சுற்றமு [illegible]
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளித்தமாயஞ் சொல்லடா சுவாமியே. (௧௫௧)

ஈணெருமை யின்கழுத்தி லிட்டபொட்ட ணங்கள்போல
மூணுநாலு சீலையில் முடிந்தவிழ்க்கு மூடர்காள்
மூணுநாலு லோகமு முடிவிலாத மூர்த்தியை
ஊணியூணி நீர்முடிந்த வுண்மையென்ன வுண்மையே. (௧௫௨)

காவல்நாலு குஞ்சதஞ்சு தாயதான வாறுபோல்
காவலான கூட்டிலே கலந்துசண்டை கொள்ளுதே
கூவமான கிழநரிக் கூட்டிலே புகுந்தபின்
காவல்நாலு குஞ்சதஞ்சு தானிழந்து போனதே. (௧௫௩)

மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே யெழுந்திருந்து நாலுகட் டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே. (கருச)

செம்பினிற் களிம்புவந்த சிதாங்கள் போலவே
சீவனுக் கறிவுவந்த சேதியேது செப்புவீர்
அம்பினி லெழுந்தநாத வணியராக சோதியை
வெம்பிவெம்பி வெம்பியே மெலிந்துமேல் கலந்திட
செம்பினிற் களிம்புவிட்ட சேதியேது காணுமே (கருரு)

பாடுநாத மும்முனை பாதநாத மலவிராய
ஓடிபோடி மீளுவார் குருமுனை யடைகும்
தேடிவந்த காலனுந் திகைத்திருந்து போய்விடும்
கோடிகால முமுமுரந் திருந்தவாற தெங்ஙனே (கருசா)

பிணங்குகின்ற தேதடா பிறமுறைந்து கெட்ட மூடரே
பிணங்கிலாத பேரொளிப் பராபரனை யறிகிலீர்
பிணங்குவோ ரிருவினைப் பிணக்கறுக்க வல்லிராய்
பிணங்கிலாத பெரியவின்பம் பெற்றிருக்க லாகுமே. (கருஎ)

மீனிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மீனிருக்கு நீரலோ முழுகுவதுங் குடிப்பதும்
ஆட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
ஆட்டிறைச்சி யல்லவோ யாகநீங்கள் பண்ணுறீர். (கருஅ)

மாட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மாட்டிறைச்சி யல்லவோ பரந்தரிக் கிடுவது
மானிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்பினூ லணிவதும். (கருகூ)

அக்கிடீ ரனைத்துயிர்க்கு மாதியாகி நிற்பது
முக்கிடீ ருமைப்பிடித்து குத்தரித்து விட்டது
மைக்கிடிற் பிறந்திறந்து மாண்டுமாண்டு போவது
மொக்கிடி லுமங்குநா றுணர்த்திவித்த துண்மையே. (கசா0)

ஐயன்வந்து மெய்யகம் புகுந்துவாற தெங்ஙனே
செய்யதிங்க ளங்குரும்பை நீர்புகுந்த வண்ணமே
ஐயன்வந்து மெய்யகம் புகுந்துகோவில் கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்ப தில்லையே. (கசாக)

நவ்வுமவ்வை யுங்கடந்து நாடொணு தசியின்மேல்
வவ்வுயவ்வு ளுஞ்சிறந்த வண்மைஞான போதகம்
ஓவுசுத்தி யுணாணிறைந் துச்சியூ டுருவியே
இவ்வ்வகை யறிந்தபேர்க ளீசனாணை யீசனே. (கசாஉ)

ஆக்கர மனாதியோ வாத்தும மனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ
தக்கமிக்க நூல்களுஞ் சாத்திர மனாதியோ
தற்பரத்தை யூடறுத்த சற்குரு வனாதியே. (ககூங)

பார்த்ததேது பார்த்திடில் பார்வையூ டழிந்திடும்
கூத்ததா யிருப்பிராய் குறிப்பிலச் சிவமதாம்
பார்த்த பார்த்த போதெலாய் பார்வையு மிசைந்துநீர்
பூத்தபூவுங் காயுமாய் பொருந்துவீர் பிறப்பிலே. (ககூச)

நெற்றிபத்தி யுழலுகின்ற நீலமா விளக்கினைப்
பத்தியொத்தி நின்றுநின்று பற்றறுத்த தென்பலன்
உற்றிருந்து பாரடா வுள்ளொளிக்கு மேலொளி
அத்தனை யமர்ந்திட மறிந்தவன்ன ஞானியே. (ககூரு)

கருத்தரிக்கு முன்னெலாங் காயம்நின்ற தெவ்விடம்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தெவ்விடம்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற தெவ்விடம்
திருக்கறுத்துக் கொண்டல்லோ சிவாயமென்று கூறுவீர். (ககூசு)

கருத்தரிக்கு முன்னெலாய் காயநின்ற தேயுவில்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தப்புவில்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயமென்று கூறுமே. (ககூஎ)

தாதரான தாதரும் தலத்திலுள்ள சைவரும்
கூத்தரைப் பறச்சியைக் கூடிசெய்த சாரியம்
வீதிபோகு மீசனை விரைந்துநீர் மறிந்ததும்
பாதகங்க ளாகவே பலித்ததே சிவாயமே. (ககூஅ)

ஓடியோடி பாவிழைத் துள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனைவந்து பாவிமேல் குதித்ததும்
பணிக்கன்வந்து பார்த்ததும் பாரமில்லை யென்றதும்
இழையறுந்து போனதும் என்னமாய மீசனே. (ககூகூ)

சதிரம்நாலு மறையுமிட்டு தானதங்கி மூன்றுமே
எதிரதான வாயுவாறு மெண்ணும்வட்ட மேவியே
உதிரந்தான் வரைகளெட்டு மெண்ணுமென் சிரசின்மேல்
கதிரதான காயகத்தில் கலந்தெழுந்த நாதமே. (கஎ0)

நாலொடாறு பத்துமேல் நாலுமூன்று மிட்டபின்
மேலுபத்து மாறுடன் மேதிரண்ட தொன்றுமே
கோலியஞ் செழுத்துளே குருவிருந்து கூறிடில்
தோலுமேனி நாதமாய்த் தோற்றிநின்ற கோசமே. (கஎக)

கோசமா யெழுந்ததுங் கூடுருவி நின்றதும்
தேசமாய்ப் பிறந்ததுஞ் சிவாயமஞ் செழுத்துமே
ஈசனா ரிருந்திட மனேகனேக மந்திரம்
ஆகமம் நிறைந்துநின்ற வைம்பத்தோ ரெழுத்துமே. (கஎஉ)

அங்கலிங்க பீடமா யையிரண் டெழுத்திலும்
பொங்குதா மரையினும் பொருந்துவார் மனத்தினும்
பங்குகொண்ட சோதியும் பரந்தவஞ் செழுத்துமே
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே. (கஎங)

உவமையில்லாப் பேரொளிக்கு ளுருவமான தெவ்விடம்
உவமையாகி யண்டத்தி லுருவநின்ற தெவ்விடம்
தவமதான பரமனார் தரித்துநின்ற தெவ்விடம்
தற்பரத்தில் சலம்பிறந்து தாங்கிநின்ற தெவ்விடம். (கஎச)

ஈகயதாக வெருதுமூன்று கன்றையீன்ற தெவ்விடம்
சொல்லுகீழு லோகமேழும் நின்றவாற தெவ்விடம்
அவளதான மேருவும் அம்மைதான தெவ்விடம்
அவனுமவளு மாடலா லருஞ்சீவன் பிறந்ததே. (கஎரு)

உதிக்குகின்ற தெவ்விட மொடுங்குகின்ற தெவ்விடம்
கதிக்குகின்ற தெவ்விடங் கன்றுறக்க மெவ்விடம்
மதிக்கநின்ற தெவ்விட மதிமயக்க மெவ்விடம்
விதிக்கவல்ல ஞானிகாள் விரிந்துரைக்க வேணுமே. (கஎசு)

திரும்பியாடு வாசலெட்டு திறமுரைந்த வாசலெட்டு
மருங்கிலாத கோலமெட்டு வன்னியாடு வாசலெட்டு
துரும்பிலாத கோலமெட்டு சுத்திவந்த மருளரோ
அரும்பிலாத பூவுமுண் டையனாரை யுண்மையே. (கஎஎ)

தானிருந்து மூலவங்கி தணலெழுப்பி வாயுவால்
தேனிருந்து வரைதிறந்து தித்தியொன்று வொத்தவே
வானிருந்த மதியமூன்று மண்டலம் புகுந்தபின்
ஊனிருந் தளவுகொண்ட யோகிநல்ல யோகியே. (கஎஅ)

முத்தனாய் நினைந்தபோது முடிந்தவண்டத் துச்சிமேல்
பத்தனாரு மம்மையும் பரிந்துவாட வாடினார்
சித்தரான ஞானிகாள் தில்லையாட லென்பிர்காள்
அத்தனாட லுற்றபோ தடங்கலாட லுற்றதே. (கஎகூ)

ஒன்றுமொன்று மொன்றுமே யுலகனைத்து மொன்றுமே
அன்றுமின்று மொன்றுமே யனாதியான தொன்றுமே
கன்றல்நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டினால்
அன்றுதெய்வ மும்முளே யறிந்ததே சிவாயமே. (கஅ0)

இருவரா லெடுத்தகாய மில்லையம்ப லத்துளே
அறிவினா லெடுத்தகாய மஞ்சினா லமைந்ததே
கருவினாத மூடுபோய் கழன்றவாச லொன்பதும்
ஒருவரா லொருவர்கூடி யுள்ளுளே யமர்ந்ததே. (௧௮௧)

வட்டமான கூட்டிலே வளர்ந்தெழுந்த வம்புலி
சட்டமீ படைத்திலே சங்குசக் கரங்களாய்
விட்டதஞ் சுவாசலில் கதவினா லடைத்துநான்
முட்டையி லெழுந்தசீவன் விட்டவாற தெங்ஙனே. (௧௮௨)

கோயில்பள்ளி யேதடா குறித்துநின்ற தேதடா
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்க ளேதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியிற் காணலா மிறையையே. (௧௮௩)

நல்லவெள்ளி யாறதாய் நயந்தசெம்பு நாலதாய்
கொல்லுநாக மூன்றதாக் குலாவுசெம்பொ னிரண்டதாய்
வில்லினோசை யொன்றுடன் விளங்கவூத வல்லிரேல்
எல்லையொத்த சோதியானை யெட்டுமாறுந் தாருமே. (௧௮௪)

மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுத் திருப்பரே. (௧௮௫)

உருவுமல்ல வொளியுமல்ல வொன்றதாகி நின்றதே
மருவுமல்ல கந்தமல்ல மந்தநாடி யுற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசுமாவி தானுமன்
றரியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லரே. (௧௮௬)

ஓரெழுத் துலகெலா முதித்தமட் சரத்துளே
ஈரெழுத் தியம்புகின்ற மின்பமே தறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே. (௧௮௭)

ஆதியந்த மூலவிந்து நாதமைந்து பூதமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமைந் தெழுத்துமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமேவி நின்றதும்
ஆதியந்த மூலவிந்து நாதமே சிவாயமே. (௧௮௮)

அன்னமிட்ட பேரெலா மனேகங்கோடி வாழுமே
சொன்னமிட்ட பேரெலாந் துரைத்தனங்கள் பண்ணலாம்
வின்னமிட்ட பேரெலாம் வீழ்வரெந் நரகிலே
கன்னமிட்ட பேரெலாங் கடந்துநின்றதின்னமே. (௧௮௯)

ஓதொணாமல் நின்றநீ ருறக்கமூணு மற்றநீர்
சாதிபேத மற்றநீர் சங்கையன்றி நின்றநீர்
கோதிலாத வறிவிலே குறிப்புணர்ந்து நின்றநீ
ஏதுமன்றி நின்றநீ ரியங்குமாற தெங்ஙனே. (௧௧௦)

பிறந்தபோது கோவண மிலங்குநூல் குடுமியும்
பிறந்துடன் பிறந்ததோ பிறங்குநாட் சடங்கெலா
மறந்தநாலு வேதமும் மனத்துளே யுதித்ததோ
நிலம்பிளந்து வானிடிந்து நின்றதென்ன வல்லீரே. (௧௧௧)

துருத்தியுண்டு கொல்லனுண்டு சொர்ணமான சோதியுண்டு
திருத்தமாய் மனத்திலுன்னித் திகழவூத வல்லிராய்
பெருத்ததூணி லங்கியோ டியங்கதாய் விரிந்திடும்
நிருத்தமான சோதியு நீயுமல்ல தில்லையே. (௧௧௨)

வேடமிட்டு மணிதுலக்கி மிக்கதூப தீபமாய்
ஆடறுத்து கூறுபோட்ட வவர்கள்போலும் பண்ணுநீர்
தேடிவைத்த செம்பெலாந் திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசையென்ன பூசையே. (௧௧௩)

மூட்டுகண்ட தூமையின் முளைத்தெழுந்த சிவனை
நாட்டிக்கொண்டு நின்றிடங் கடந்துநோக்க வல்லிராய்
முட்டுமற்று கட்டுமற்று முடியினின்ற நாதனை
எட்டுதிக்குங் கையிறொ ருந்தவீட தாகுமே. (௧௧௪)

அருக்கனோடு சோமனு மதுக்குமப் புறத்திலே
நெருக்கியேறு தாரகை நெருங்கிநின்ற நேர்மையை
உருக்கியோ ரெழுத்துளே யொப்பிலாத வெளியிலே
யிருக்கவல்ல பேரலோ யினிப்பிறப்ப தில்லையே. (௧௧௫)

மூலமுண்ட போதுமோ முளைத்தவஞ் செழுத்தின்மேல்
போலவட்ட முன்றுமாய் குலைந்தலைந்து நின்றநீர்
ஞாலவட்ட மன்றுளே நவின்றஞான மாகிலோ
ஏலவட்ட மாகியே யிருந்ததே சிவாயமே. (௧௧௬)

சுக்கிலத் திசையுளே சுரோணிதத்தின் வாசலுள்
முச்சதிர மெட்டுளே மூலாதார வறையிலே
அச்சமற்ற சவ்வுளே யரியர னயனுமாய்
உச்சரிக்கு மந்திர முண்மையே சிவாயமே. (௧௧௭)

பூவுநீரு மென்மனம் பொருந்துகோயி லென்னுளம்
ஆவியோடு லிங்கமாய கண்டமெங்கு மாகிலும்
மேவுகின்ற ஐவரும் விளங்குதீப தீபமாய்
ஆடுகின்ற கூத்தனுக்கோ ரந்திசந்தி யில்லையே. (௧௧௮)

உருக்கலந்த பின்னல்லோ வுன்னைநா னறிந்தது
இருக்கிலென் மறக்கிலென் னினைந்திருந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது நீயுநானு மொன்றலோ
திருக்கலந்த போதலோ தெளிந்ததே சிவாயமே. (கசுசு)

சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துதேவ ராகலாம்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துவான மாளலாம்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துகொண்ட வான்பொருள்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துகொள்ளு முண்மையே. (உ00)

பொய்க்குடத் திலைந்தொதுங்கி போகம்வீசு மாறுபோல்
இச்சடமு மிந்தியமும் நீருமே லலைந்ததே
உக்குடஞ் சவத்தைமொண் டமர்ந்திருந்த வாறுபோல்
இச்சடஞ் சிவத்தைமொண்டு கந்தமர்ந் திருப்பதே. (உ0க)

பட்டமுங் கயறுபோல் பறக்கநின்ற சீவனை
பார்வையாலே பார்த்துநீ படுமுடிச்சுப் போடடா
தெட்டலும் படாதடா சீவனை விடாதடா
தட்டறவே சிக்கெனக் களவறிந்த கள்ளனை. (உ0உ)

அல்லிறந்து பகலிறந்த சம்பிரம மிறந்துபோய்
அண்டரண்ட முங்கடந் தனேகனேக ரூபமாய்
சொல்லிறந்து மனமிறந்த சுகசொரூப வுண்மையைச்
சொல்லியாற வென்னில்வேறு துணைவரில்லை யானதே. (உ0ங)

ஐயிரண்டு திங்களா யடங்கிநின்ற தூமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டு மாகியே
மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்
துய்யகாய மானதுஞ் சொல்லுகின்ற தூமையே. (உ0ச)

அங்கலிங்க பீடமு மசைவைமூன் றெழுத்தினுஞ்
சங்குசக் கரத்தினுஞ் சகலவா னகத்தினும்
பங்குகொண்ட யோகிகள் பரமவாச லஞ்சினும்
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே. (உ0ரு)

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கு மென்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லகாணு மப்பொருள்
அஞ்செழுத்து நெஞ்சழுத்தி அவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செழுத்து மவ்வின்வண்ண மானதே சிவாயமே. (உ0சு)

ஆதரித்த மந்திர மமைந்தவாக மங்களும்
மாதர்மக்கள் சுற்றமு மறக்கவந்த நித்திரா
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளித்திடஞ் சொல்லடா சுவாமியே. (உ0எ)

அக்கர மனாதியோ வாத்துமா வனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ
தக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மனாதியோ
மிக்கவந்த யோகிகாள் விரைந்துரைக்க வேணுமே. (௨௦௮)

அறிவிலே பிறந்திருந் தாகமங்க ளோதுநீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மையோர்ந் தறிகிலீர்
உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தே
டறிவிலாத மூடரோ டணுகுமாறு தெங்ஙனே. (௨௦௯)

அள்ளிநீரை விட்டதேத கங்கையிற் குழைத்ததேது
மெள்ளவே மிணமிணென்று விளம்புகிற்கு மூடர்காள்
கள்ளவேட மிட்டதேது கண்ணைமூடி விட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிடீர் விளம்பிடீர். (௨௧௦)

அன்னைகர்ப்பத் தூமையி லவதரித்த சுக்கிலம்
முன்னையே தரித்த நும் பனிந்துளிபோ லாகுமே
உன்னிதொக்கு ளுழலுந்தூமை யுள்ளுளே யடங்கிடும்
பின்னையே பிறப்பதுந் தூமைகாணும் பித்தரே. (௨௧௧)

அழுக்கறத்தி னங்குளித் தழுக்கறாத மாந்தரே
அழுக்கிருந்த தெவ்விடம் மழுக்கிலாத தெவ்விடம்
அழுக்கிருந்த தவ்விடத் தழுக்கறாக வல்லிரேல்
அழுக்கிலாத சோதியோ டணுகிவாழ லாகுமே. (௨௧௨)

அணுத்திரண்ட கண்டமா யனைத்துபல்லி யோனியாய்
மனுப்பிறந் தோதிவைத்த நூலிலே மயங்குறீர்
சனிப்பதேது சாவதேது தாபரத்தி னூடுபோய்
நினைப்பதேது நிற்பதேது நீர்நினைந்து பாருமே. (௨௧௩)

ஆதியாகி யண்டரண்ட மப்புறத்து மப்புறம்
சோதியாகி நின்றிலங்கு சுருதிநாத சோமனை
வேதியாமல் தம்முளே வேத்துணர்ந்த ஞானிகாள்
பேதமென்ற தொன்றுமில்லை யில்லையில்லை பேதமே. (௨௧௪)

ஆக்கைமூப்ப தில்லையே யாதிகா ரணத்திலே
நாக்கைமூக்கை யுள்மடித்து நாதனாடி யூடுபோய்
ஏக்கறுத்தி ரெட்டையு மிறுக்கமூத்த வல்லிராவ்
பார்க்கபார்க்க திக்கெலாம் பரப்பிரம மாகுமே. (௨௧௫)

அஞ்சுமஞ்சு மஞ்சுமஞ்சு மல்லல்செய்து நிற்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யமர்ந்துளே யிருப்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யாதரிக்க வல்லிரேல்
அஞ்சுமஞ்சு மும்முளே யமர்ந்ததே சிவாயமே. (௨௧௬)

அஞ்செழுத்தி ளுதியா யமர்ந்துநின்ற தேதடா
நெஞ்செழுத்தி நின்றுகொண்டு நீசெபிப்ப தேதடா
அஞ்செழுத்தின் வாளதா லறுப்பதாவ தேதடா
பிஞ்செழுத்தி னேர்மைதான் பகுத்துரைக்க வேண்டுமே. (உகஎ)

உயிரிருந்த தெவ்விட முடம்பெடுப்ப தின்முனம்
உயிரதாவ தேதடா வுடம்பதாவ தேதடா
உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தேதடா
உயிரி ளுடம்பெடுத்த வுண்மைஞானி சொல்லடா. (உகஅ)

அறிவி ளெலடுத்தமாடம் தில்லையம் பலத்துளே
அறிவி ளெலடுத்தமாட மச்சி ளலமைந்ததே
கருளினுத மூடுபோய் கழன்றவாச லொன்பதும்
ஒருவராட வொருவரோடி யுள்ளுளே யமர்ந்ததே. (உககூ)

உருத்தரிப்ப தற்குமுன் ளுயிர்புகுந்து நாதமும்
கருத்தரித்த தற்குமுன் காயமென்ன சோணிதம்
அருட்டரிப்ப தற்குமுன் னறிவுமூலா தாரமாம்
குருத்தரிந்து கொள்ளுவீர் குணங்கெடுங் குருக்களே (உஉ0)

எங்குமுள்ள வீசனு மெம்முடல் புகுந்தபின்
பங்குகூறு பேசுவார் பாடுசென் றணிவரல்லவே
எங்கள்தெய்வ முங்கள்தெய்வ மென்றிரண்டு பேதமோ
உங்கள்பேத மன்றியே வுண்மையொன்று மில்லையே (உஉக)

அரியுமாகி யரனுமாகி யண்டமெங்கு மொன்றதாய்
பெரியதாகி யுலகுதன்னில் நின்றபாத மொன்றலவோ
விரிவிதென்று வேறுசெய்து வேடமிட்ட மூடரே
அறிவிலேனுடு பாருமிங்கு மொங்குமெங்கு மொன்றதே (உஉஉ)

வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமுந் தரிக்குநீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ்செபிக்கு மந்திரம்
முந்தமந் திரத்திலோ மூலமந்தி ரத்திலோ
எந்தமந்தி ரத்திலோ வீசன்வந் தியங்குமே. (உஉங)

அகாரகா ரணத்திலே யனேகனேக ரூபமாய்
உகாரகா ரணத்திலே யுருத்தரித்து நின்றனன்
மகாரகா ரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகாரகா ரணத்திலே தெளிந்ததே சிவாயமே. (உஉச)

அவ்வெழுத்தி லுவ்வுவந்த காரமுஞ் செனித்ததோ
உவ்வெழுத்து மவ்வெழுத்து மொன்றையொன்று நின்றதோ
செவ்வையொத்து நின்றலோ சிவபதங்கள் சேரினும்
இவ்வையொத்த ஞானிகாள் விரைந்துரைக்க வேணுமே. (உஉரு)

ஆதியான வஞ்சிலு மனாதியான நாலிலும்
சோதியான மூன்றிலுஞ் சுரூபமற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலே நிறைந்துநின்ற வஸ்துவே
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே. (உஉசு)

வானிலாத தொன்றுமில்லை வானுமில்லை வானிடில்
ஊனிலாத தொன்றுமில்லை யூனுமில்லை யூனிடில்
நானிலாத தொன்றுமில்லை நானுமில்லை நானிடில்
தானிலாத தொன்றுமே தயங்கியாடு மொன்றதே. (உஉஎ)

சுழிந்ததோ ரெழுத்தையூனி சொல்முகத் திருத்தியே
துன்பவின்ப முங்கடந்து சொல்லும்நாடி யூடுபோய்
அழுத்தமான வக்கரத்தி னங்கியை யெழுப்பியே
ஆறுபங்க யங்கடந் தப்புறத்து வெளியிலே. (உஉஅ)

விழிந்தகண் குவித்தபோ தடைந்துபோ யெழுத்தெல்லாம்
விளைந்துவிட்ட யிந்திரசால வீடதான வெளியிலே
அழுந்திணலு மதிமயங்கி யனுபவிக்கும் வேளையில்
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே. (உஉகூ)

நல்லமஞ் சனங்கள்தேடி நாடிநாடி யோடுநீர்
நல்லமஞ் சனங்களுண்டு நாதனுண்டு நம்முளே
எல்லைமஞ் சனங்கள்தேடி யேகபூசை பண்ணினல்
தில்லைமேவு சீவனுஞ் சிவபதத்து ளாடுமே. (உ௩0)

உயிரகத்தில் நின்றிடு முடம்பெடுத்த தற்குமுன்
உயிரகார மாயிடு முடலுகார மாயிடும்
உயிரையு முடம்பையு மொன்றிவிப்ப தச்சிவம்
உயிரினு லுடம்புதா னெடுத்தவா ருரைக்கிலே. (உ௩க)

அண்டமேழு முழலவே யனந்தயோனி யுழலவே
பண்டுமா லயனுடன் பரந்துநின் றுழலவே
எண்டிசை கடந்துநின் றிருண்டசத்தி யுழலவே
அண்டரண்ட மொன்றதா யாதிநட்ட மாடுமே. (உ௩உ)

உருவநீ ருறுப்புகொண் டுருத்தரித்து வைத்திடும்
பெரியபாதை பேசுமோ பிசாசையொத்த மூடரே
கரியமாலு மயனுமாக் காணொணுத கடவுளை
உருமையாக வும்முளே யுணர்ந்துணர்ந்து கொள்ளுமே. (உ௩௩)

பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள தென்றுநீர்
எண்ணமுற்று மென்னபே ருரைக்குறீர்க ளேழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத் தளிக்கவும்
ஒண்ணுமாகி யுலகளித்த வொன்றைநெஞ்சி லுன்னுமே. (உ௩ச)

நாலதான யோனியுள் நவின்றவிந்து மொன்றதாய்
ஆலதான வித்துளே யமர்ந்தொடுங்கு மாறுபோல்
சூலதான வுற்பனஞ் சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகாள் விதித்துவாக்க வேணுமே. (௨௩௫)

அருவமா யிருந்தபோ தன்னையங் கறிந்திலை
உருவமா யிருந்தபோ துன்னைநா னறிந்தனன்
குருவினால் தெளிந்துகொண்டு கோதிலாத ஞானமாம்
பருவமான போதலோ பரப்பிரம மானதே. (௨௩௬)

பிறப்பது மிறப்பதும் பிறந்திடா திருப்பதும்
மறப்பது நினைப்பது மறந்ததைத் தெளிந்ததும்
துறப்பதுந் தொடுப்பதுஞ் சுகித்துவாரி யுண்பதும்
பிறப்பது மிறப்பதும் பிசத்தைவிட் டதங்குமே (௨௩௭)

கண்ணிலே யிருப்பனே கருங்கடல் கடைந்தமால்
விண்ணிலே யிருப்பனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே யிருப்பனே தராதலம் படைத்தவன்
என்னுளே யிருப்பனே யெங்குமாகி நிற்பனே. (௨௩௮)

ஆடுநாறு தேடினு மானைசேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையு முகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல தர்மம்வந்து நிற்குமே. (௨௩௯)

எள்ளிரும்பு கம்பிளி யிடும்பருத்தி வெண்கலம்
அள்ளியுண்ட நாதனுர்கோ ராடையாடை வஸ்திரம்
உள்ளுருக்கு வேதியர்க் குற்றதான மீதிரால்
மெள்ளவந்து நோயணைத்து மீணடிடுஞ் சிவாயமே (௨௪௦)

ஊரிலுள்ள மனிதர்கா ளொருமனமாய் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத் திழுக்கிறீர்
ஆரொணாது மறியொணாத வாதிசித்த நாதனை
பேதையான மனிதர்பண்ணும் பிரளிபாரும் யாருமே. (௨௪௧)

மருள்புகுந்த சிந்தையால் மயங்குகின்ற மாந்தரே
குருக்கொடுத்த மந்திரங் கொண்டுநீந்த வல்லிரோ
குருக்கொடுத்த தொண்டரும் குகனொடிந்த பிள்ளையும்
பருத்திபட்ட பன்னிரண்டு பாடுதான் படுவரோ. (௨௪௨)

அன்னைகர்ப்ப வறையதற்கு ளங்கியின்பிர காசமாய்
அந்தறைக்குள் வந்திருந் தரியவிந்து ரூபமாய்
தன்னையொத்து நின்றபோது தடையறுத்து வெளியதாய்
தங்கநற் பெருமைதந்து தலைவனாய் வளர்த்ததே. (௨௪௩)

உன்னையற்ப நேரமு மறந்திருக்க லாகுமோ
உள்ளமீ துறைந்தெனை மறப்பிலாத சோதியை
பொன்னை வென்ற பேரொளிப் பொருவிலாத வீசனை
பொன்னடிப் பிறப்பிலாயை யென்றுநான் வணங்க வேணுமே. (உசச)

பிடித்ததெண்டு மும்மதோ பிரமமான பித்தர்காள்
தடித்தகோல மத்தைவிட்டு சாதிபேதங் கொண்மினோ
வடித்திருந்த தோர்சிலத்தை வாய்மைகூற வல்லிரேல்
திடுக்கமுற்ற வீசனைச் சென்றுகூற லாகுமே. (உசரு)

சத்திநீ தயவுநீ தயங்குசங்கி னோசைநீ
சித்திநீ சிவனுநீ சிவாயமான சிவனும்நீ
முத்திநீ முதலுநீ மூவரான தேவர்நீ
அத்திபூர மும்முமே யறிந்துணர்ந்து சொன்னுமே. (உசசா)

சட்டையிட்டு மணிதுலங்குஞ் சாத்திரச் சழக்கரே
பொஸ்தகத்தை மெத்தவைத்து போதமோதும் பொய்யரே
நிட்டையேது ஞானமேது நீரிருந்த வக்ஷரம்
பட்டையேது சொல்லிரே பாதகக் கபடரே. (உசஎ)

உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்
வெண்மையாகி நீரிலே விரைந்துநீர தானதும்
தன்மையான காயமே தரித்துருவ மானதும்
தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே. (உசஅ)

வஞ்சகப் பிறவியை மனத்துளே விரும்பியே
அஞ்செழுத்தி லுண்மையே யறிவிலாத மாந்தர்காள்
வஞ்சகப் பிறவியை வதைத்திடவும் வல்லிரால்
அஞ்செழுத்தி னுண்மையே யறிந்துகாண லாகுமே. (உசகூ)

காயிலாத சோலையிற் கனியுகந்த வண்டுகள்
ஈயிலாத தேனையுண் டிராப்பக லுறங்கிறீர்
பாயிலாத கப்பலேறி யக்கரைப் படுமுனே
வாயினா லுரைப்பதாகு மோமவுன ஞானமே. (உரு0)

பேய்கள்பேய்க ளென்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்
பேய்கள்பூசை கொள்ளுமோ பிடாரிபூசை கொள்ளுதோ
ஆதிபூசை கொள்ளுமோ யனாதிபூசை கொள்ளுதோ
காயமான பேயல்லோ கணக்கறிந்து கொண்டதே. (உருக)

மூலமண்ட லத்திலே முச்சதிர மாதியாய்
நாலுவாச லெம்பிரான் நடுவிதித்த மந்திரம்
கோலியெட் டிதழுமாய் குளுந்தலர்ந்த திட்டமாய்
மேலும்வேறு காண்கிலேன் விளைந்ததே சிவாயமே. (உருஉ)

ஆதிகூடு நாடியோடு காலைமாலை நீரிலே
சோதிமூல மானநாடி சொல்லிறந்த தூவெளி
யாதிகூடு நெற்பறித்த காரமாதி யாகமம்
பேதபேத மாகியே பிறந்துட லிறந்ததே. (௨௫௩)

பாங்கினோடு பரமபாச னத்திருந்து பார்த்துநின்
றோங்கிநாடி மேலிருந்து யுச்சரித்த மந்திரம்
மூங்கில்வெட்டி நாருரித்து முச்சுதெற்றி யுணருநாம்
ஆய்ந்தநூலிற் றோன்றுமே யறிந்துணர்ந்து கொள்ளுமே. (௨௫௪)

புண்டரீக மத்தியி லுதித்தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றினோடு மன்னுகின்ற மாயனை
அண்டரண்ட மூடறுத் தறிந்துணர வல்லிரேல்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே. (௨௫௫)

அம்பலங்கள் சந்தியி லாடுகின்ற வம்பனே
அன்பனுக்கு ளன்பனாய் நிற்பனாதி வீரனே
அன்பருக்கு ளன்பராய நின்றவாதி நாயனே
உன்பருக்கு வுண்மையாய் நின்றவுண்மை யுண்மையே. (௨௫௬)

அண்ணாவ தேதடா வறிந்துரைத்த மந்திரம்
தண்ணாக வந்தவன் சகலபுராணங் கற்றவன்
கண்ணாக வந்தவன் காரணத் துதித்தவன்
ஒண்ணதாவ தேதடா வுண்மையான மந்திரம். (௨௫௭)

எள்ளதோர் புறம்பதோ ருயிரொடுங்கி நின்றிடப
மெள்ளவந்து கிட்டிநீர் வினவவேணு மென்கிறீர்
உள்ளதும் புறம்பது மொத்தபோது நாதமாய்
கள்ளவாச லைத்திறந்து காணவேணு மப்பனே. (௨௫௮)

ஆரலைந்து பூதமா யளவிடாத யோனியும்
பாரமான தேவரும் பழுதிலாத பாசமும்
ஓரொணாத வண்டமு முலோகலோக லோகமும்
சேரவெந்து போயிருந்த தேகமேது செப்புமே. (௨௫௯)

என்னகத்து ளென்னைநா னெங்குநாடி யோடினேன்
என்னகத்து ளென்னைநா னறிந்திலாத தாகையால்
என்னகத்து ளென்னைநா னறிந்துமெய் தெரிந்தபின்
என்னகத்து ளென்னையன்றி யாதுமொன்று மில்லையே. (௨௬0)

மின்னெழுந்து மின்மறைந்து மின்னொடுங்கு மாறுபோல்
என்னுள்நின்ற வென்னொளி யென்னுளே யடங்குமே
கண்ணினின்ற கண்ணினேர்மை கண்ணறிவி லாமையால
என்னுணின்ற வென்னைநா னறிந்ததில்லை யில்லையே. (௨௬௧)

அடக்கினு மடக்கொணுத வம்பலத்தி னூடுபோய்
அடக்கினு மடக்கொணும லென்புருக்கு மென்றுளே
கிடக்கினு மிருக்கினுங் கிலேசம்வந் திருக்கினும்
நடக்கினு மிடைவிடாத நாதசங் கொலிக்குமே. (௨௬௨)

மட்டுலாவு தண்டுழா யலங்கலாய் புனற்கழல்
விட்டுவீழில் தாகபோக விண்ணில்நண்ணில் வெளியினும்
எட்டினோ டிரண்டினு மிதந்தினால் மனந்தனைச்
சட்டிவீடி லாதுவைத்த காதலின்ப மாகுமே. ௨௬௩)

ஏகமுற்றி மூன்றுமுற்றி நாலுமுற்றி நன்மைசேர்
போகமுற்றி புண்ணியத்தில் முற்றியென்றி முற்றியாய்
நாகமுற்ற சயனமாய் நலங்கடல் கடந்ததீ
யாகமுற்றி யாகிநின்ற தென்கொலாதி தேவனே. (௨௫௪)

மூன்றுமுப்பத் தாறினோடு மூன்றுமூன்று மாயமாய்
மூன்றுமுந்நூ றாகிமூன்று மூன்றுமூன்று மூன்றுமாய்த்
தோன்றுசாதி மூன்றதாய் துலக்கமில் விளக்கதாய்
என்றெனாவி னுள்ளுருந்த தென்கொலோநம் மீசனே. (௨௬௫)

ஐந்துமைந்து மைந்துமா யல்லவத்து ளாயுமாய்
ஐந்துமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
ஐந்துமைந்து மைந்துமாய மைந்தணைத்து நின்றநீ
ஐந்துமைந்து மாயநின்னை யாவர்காண வல்லரே. (௨௬௬)

ஆறுமாறு மாறுமாயொ ரைந்துமைந்து மைந்துமாய்
ஏறுசீ ரிரண்டுமூன்று மேழுமாறு மெட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறுமோசை யாயமர்ந்த மாயமாய மாயனே. (௨௬௭)

எட்டுமெட்டு மெட்டுமாயொ ரேழுமேழு மேழுமாய்
எட்டுமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
எட்டுமாய பாதமோ டிறைஞ்சிநின்ற வண்ணமே
எட்டெழுத்து மோதுவார்க ளல்லனீங்கி நிற்பரோ. (௨௬௮)

பத்தினோடு பத்துமாயோ ரேழினோடு மொன்பதாய்
பத்துநாற் றிசைக்குநின்ற நாடுபெற்ற நன்மையா
யத்துமாய கொத்தமோடு மத்தலமிக் காதிமால்
பத்தர்கட்க லாதுமுத்தி முத்திமுத்தி யாகுமே. (௨௬௯)

வாசியாதி நேசமொன்றி வந்தெதிர்ந்த தென்னுக
மேசமாக நாளுலாவ நன்மைசேர்ப வங்களில்
வீசிமேல் நிமிர்ந்ததோளி யில்லையாக்கி னுய்கழல்
ஆசையால் மறக்கலா தமரராக லாகுமே. (௨௭௦)

மவுனவஞ் செழுத்திலே வாசியேறி மெள்ளவே
வானளாய் நிறைந்தசோதி மண்டபம் புகுந்தபோ
தவனுநானு மேமுயங்கி யனுபவித்த வளவிலே
அவனுமில்லை நானுமில்லை யாருமில்லை யானதே. (௨௭௧)

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கு மன்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லகாணு மப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி யவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செழுத்து மூன்றெழுத்து வவ்வுமாஞ் சிவாயமே. (௨௭௨)

பொய்யுரைக்க போதுமென்று பொய்யருக் கிருக்கையால்
மெய்யுரைக்க வேண்டுதில்லை மெய்யர்மெய்க் கிலாமையால்
வையகத்தி லுண்மைதன்னை வாட் திறக்க வஞ்சினேன்
னையவைத்த தென்கொலோ நமசிவாய நாதனே (௨௭௩)

ஒன்றையொன்று சொன்றுட னுணவுசெய் திருக்கினும்
மன்றினூடு பொய்களவு மாறுவேறு செய்யினும்
பன்றிதேடு மீசனைப் பரிந்துகூட வல்லிரேல்
அன்றுதேவ ரும்முனே யறிந்துணர்ந்து சொல்லுமே. (௨௭௪)

மச்சகத்து ளேயிவுந்து மாயைபேசும் வாயுவை
அச்சகத்து ளேயிருந் தறிவுணர்த்திக் கொள்விராம்
அச்சகத்து ளேயிருந் தறிவுணர்த்தி கொண்டபின்
இச்சையற்ற வெம்பிரா னெங்குமாகி நிற்பனே. (௨௭௫)

வயலிலே முளைத்தசெந்நெல் களையதான வாறுபோல்
உலகினோரும் வன்மைகூறி லவ்வுமார நங்கனே
விரகிலே முளைத்தெழுந்த மெய்யலாது பொய்யதாய்
நரகிலே பிறந்திருந்து நாடுபட்ட பாடதே (௨௭௬)

ஆடுகின்ற வெம்பிரானை யங்குமிங்கு மென்றுநீம்
தேடுகின்ற பாவிகாள் தெளிந்ததொன்னை யோர்கிலீர்
காடுநாடு வீடுவிண் கலந்துநின்ற களவினை
நாடியோடி யும்முளே நயந்துணர்ந்து பாருமே. (௨௭௭)

ஆடுகின்ற வண்டர்கூடு மப்புற மதிப்புறம்
தேடுநாலு வேதமுந் தேவரான மூவரும்
நீடுவாழி பூதமும் நின்றதோர் நிலைகளும்
ஆடுவாழி னொழியலா தனைத்துமில்லை யில்லையே. (௨௭௮)

ஆவதும் பரத்துளே யழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே யாடுமாம் பரத்துளே. (௨௭௯)

ஏழுபா ரெழுகட லியங்களெட்டு வெற்புடன்
சூழுவான் கிரிகடந்து சொல்லுமே ழுலகமும்
ஆழிமால் விசும்புகொள் பிர்மாண்டரண்ட வண்டமும்
ஊழியா னொளிக்குளே யுதித்துட னொடுங்குமே. (௨௮௦)

கயத்துநீ ரிறைக்கிறீர் கைகள்சோர்ந்து நிற்பதேன்
மனத்துளீர மொன்றிலாத மதியிலாத மாந்தர்காள்
அகத்துளீரங் கொண்டுநீ ரழுக்கறுக்க வல்லிரேல்
நினைத்திருந்த சோதியும் நீயும்நானு மொன்றலோ. (௨௮௧)

நீரிலே பிறந்திருந்து நீர்சடங்கு செய்கிறீர்
ஆரையுன்னி நீரெலா மவத்திலே யிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெழுஞ்
சீரையுன்ன வல்லிரேற் சிவபத மடைவிரே. (௨௮௨)

பத்தொடத்த வாசலிற் பரந்துமூல வக்கர
முத்திசித்தி தொந்தமென் றியங்குகின்ற மூலமே
மத்தசித்த வைம்புலன் மகாரமான கூத்தையே
அத்தியூரர் தம்முளே யமைந்ததே சிவாயமே. (௨௮௩)

அறிவிலேடு மண்டமா யளவிடாத சோதியை
குணமதாகி யும்முளே குறித்திருக்கில் முத்தியா
முணமுணென் றும்முளே விரலையொன்றி மீளவும்
தினந்தின மயக்குவீர் செம்புபூசை பண்ணியே. (௨௮௪)

மூலமான வக்கர முகப்பதற்கு முன்னெலாங்
மூடமாக மூடுகின்ற மூடமேது மூடரே
காலனை வஞ்சுபூத மஞ்சிலே யொடுங்கினல்
ஆதியோடு கூடுமோ வனாதியோடு கூடுமோ. (௨௮௫)

முச்சதுர மூலமாகி முடிவுமாகி யேகமாய்
அச்சதுர மாகியே யடங்கியோ ரெழுத்துமாய்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்குஞான தீபமாய்
உச்சரிக்கு மந்திரத்தி னுண்மையே சிவாயமே. (௨௮௬)

வண்டுலங்கள் போலுநீர் மனத்துமா சறுக்கிலீர்
குண்டலங்கள் போலநீர் குளத்திலே முழுகுறீர்
பண்டுமுங்கள் நான்முகன் பறந்துதேடி காண்கிலான்
கண்டிருக்கு மும்முளே கலந்திருப்பர் காணுமே. (௨௮௭)

நின்றதன் றிருந்ததன்று நேரிதன்று கூரிதன்று
பந்தமன்று வீடுமன்று பாவகங்க ளற்றது
கெந்தமன்று கேள்வியன்று கேடிலாத வானிலே
[illegible]ந்தமன்றி நின்றதொன்று [illegible]ங்ஙனே உரைப்பதே

பொருந்துநீரு மும்முளே புகுந்துநின்ற காரணம்
எருதிரண்டு கன்றையீன்ற வேகமொன்றை யோர்கிலீர்
அருகிருந்து சாவுகின்ற யாவையு மறிந்திலான்
குருவிருந் துலாவுகின்ற கோலமென்ன கோலமே (௨௮௯)

அம்பரத்து ளாடுகின்ற வஞ்செழுத்து நீயல்லோ
சிம்புளாய்ப் பறந்துநின்ற சிற்பரமு நீயல்லவோ
எம்பிரானு மெவ்வுயிர்க்கு மேகபோக மாதலால்
எம்பிரானு நானுமா யிருந்ததே சிவாயமே (௨௯0)

ஈரொளிய திங்களே யியங்குகின்ற தப்புறப்
பேரொளிய திங்களே யாவரு மறிகிலீர்
காரொளிப் படலமுங் கடந்துபோன தற்பரம்
பேரொளிப் பெரும்பத மேகநாத பாதமே. (௨௯௧)

கொள்ளொணாது மெல்லொணாது சோதறக்கு ராவொணா
தள்ளொணா தணுகொணா தாயலான மனத்துளே
தெள்ளொணாது தெளிவொணாது சிற்பரத்தி னுட் பயன்
விள்ளொணாது பொருளைநான் விளம்புமாற தெங்ஙனே. (௨௯௨)

வாக்கினால மனத்தினால மதித்தகா ரணத்தினால
நோக்கொணாத நோக்கையுன்னி நோக்கையாவர் நோக்குவார்
நோக்கொணாத நோக்குவந்து நோக்கநோக்க நோக்கிடில்
நோக்கொணாத நோக்குவந்து நோக்கையெங்க ணோக்குமே. ()

உள்ளினும் புறம்பினு முலகமெங்க ளும்பரம்
தெள்ளிலெண்ணெய் போலநின் றியங்குகின்ற வெம்பிரான்
மெள்ளவந்தெ னுட் புகுந்து மெய்த்தவம் புரிந்தபின்
வள்ளலென்ன வள்ளலுக்கு வண்ணமென்ன வண்ணமே. (௨௯௪)

வேதமொன்று கண்டிலேன் வெம்பிறப்பி லாமையால
போதநின்ற வடிவதாய்ப் புவனமெங்கு மாயினாய்
சோதியுள் ளொளியுமாய்த் துரியமோட தீதமாய்
ஆதிமூல மாதியா யமைந்ததே சிவாயமே (௨௯௫)

சாணிரு மடங்கினாற் சரிந்தகொண்டை தன்னுளே
பேணியப் பதிக்குளே பிறந்திறந் துழலுவீர்
தோணியான வைவரைத் துறந்தறுக்க வல்லிரேல்
காணிகண்டு கோடியாக் கலந்ததே சிவாயமே. (௨௯௬)

அஞ்சுகோடி மந்திர மஞ்சுளே யடங்கினால்
நெஞ்சுகூற வும்முளே நினைப்பதோ ரெழுத்துளே
அஞ்சுநாலு மூன்றதாகி யும்முளே யடங்கினால்
அஞ்சுமோ ரெழுத்ததா யமைந்ததே சிவாயமே. (௨௯௭)

அக்கரத் தயற்கரத்தி லடக்கறந்த வக்கரம்
சக்கரத் துவகையுண்டு சம்புனித் திரிந்ததும்
இக்கரந்த வெவ்வுயிர்க்கு மேகபோக மாதலால்
உட்கரந்த மந்திரம் சிவாயமல்ல திலலையே. (௨௯௭)

ஆகமத்தி னுட் பொரு ளகண்டமூல மாதலால்
தாகபோக மன்றியே தரித்ததற பரமுநீ
ஏகமாதம் வைத்தனை யுணர்ந்துமஞ் செழுந்துமோ
ஏகபோக மாகியே யிருந்ததே சிவாயமே (௨௯௯)

மூலவாசல மீதுமோ முச்சதுர மாகியே
நாலுவாச லெண்விரல நடுவுதித்த மந்திரம்
கோலமொன்று மஞ்சுமாகு மிங்கலைந்து நின்றநீ
வேறுவேறு கண்டிலேன் விளைந்ததே சிவாயமே. (௩00)

சங்கிலந் திடியுளோ சுழித்ததோர் முப்பதுமோ
அக்கரந் திடியுளோ யமர்ந்தவாகி சோதிநீ
உக்கரந் தடியுளோ யுணர்ந்தவரு செழுத்துமோ
அககரம தாகியே யமர்ந்ததே சிவாயமே (௩0௧)

குண்டலத்து ளோயுளோ குறித்தகத்து நாயகன்
கண்டவந்த மண்டலங் கருத்தழிந்த கூத்தனை
விண்டலர்ந்த சந்திரன் விளங்குகின்ற மெய்ப்பொருள்
கண்டுகொண்ட மண்டலஞ் சிவாயமல்ல திலலையே. (௩0௨)

சுற்றுமைந்து கூடமென்று சொலலிறந்த தோர்வெளி
சத்தியுஞ் சிவனுமாக நின்றதன்மை யோர்கிலீர்
சத்தியாவ துமமுடல தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளறிந்திலீர் பிரானிருந்த கோலமே. (௩0௩)

மூலமென்ற மந்திர முளைத்தவஞ் செழுந்துமோ
நாலுவேத நாவுளோ நவின்றஞான மெய்யுளோ
ஆலமுண்ட கண்டனு மரியயனு மாதலால்
ஓலமென்ற மந்திரஞ் சிவாயமல்ல திலலையே. (௩0௪)

தத்துவங்க ளொன்றுநீர் தமைக்கடிந்து போவிர்காள்
தத்துவஞ் சிவமதாகில் தற்பரமு நீரல்லோ
முத்திசீவ னாதமே மூலபாதம் வைத்தபின்
அத்தனாரு மும்முளோ யறிந்துணர்ந்து கொள்ளுமே. (௩0௫)

மூன்றுபத்து மூன்றையு மூன்றுசொன்ன மூலனே
தோன்றுசேர ஞானிகாள் துய்யபாத மென்றலை
ஏன்றுவைத்த வைத்தபின் னியம்புமஞ் செழுத்தையும்
தோன்றவோத வல்லிரேல் துய்யசோதி காணுமே. (௩0௬)

உம்பர்வான கத்தினு மூலகபார மேழினும்
நம்பர்நாடு தன்னினு நாவலென்ற தீவினும்
செம்பொன்மாட மல்குதில்லை யம்பலத்து ளாடுவான்
எம்பிரான லாதுதெய்வ மில்லையில்லை யில்லையே. (௱௦௭)

பூவிலாய வைந்துமாய் புனலில்நின்ற நான்குமாய்
தீயிலாய மூன்றுமாய் சிறந்தகா லிரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறுவேறு தன்மையாய
நீயலாமல் நின்றநேர்மை யாவர்காண வல்லரோ. (௱௦௮)

அந்தரத்தி லொன்றுமா யசைவுகா லிரண்டுமாய்
செந்தழலில் மூன்றுமாய்ச் சிறந்தவப்பு நான்குமாய்
ஐந்துபாரி லைந்துமாய மைந்திருந்த நாதனை
சிந்தையிற் றெளிந்துமாயை யாவர்காண வல்லரோ. (௱௦௯)

மனவிகார மற்றுநீர் மதித்திருக்க வல்லிரேல்
நினைவிலாத மணிவிளக்கு நித்தமாகி நின்றிடும்
அனைவரோதும் வேதமு மகம்பிதற்ற வேணுமேற்
கனவுகண்ட துண்மைநீர் தெளிந்ததே சிவாயமே. (௱௧௦)

இட்டகுண்ட மேதடா விருக்குவேத மேதடா
சுட்டமட் கலத்திலே சுற்றுநூல்க ளேதடா
முட்டிநின்ற தேதடா முளைத்தெழுந்த தேதடா
பட்டுபட் டுடுத்தபாடு பாடுபட் டறிவிரோ (௱௧௧)

நீரிலே முளைத்தெழுந்த தாமரையி னீரிலே
நீரினோடு கூடிநின்று நீரிலாத வாறுபோல
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண் டிருப்பிரோ (௱௧௨)

உறங்கிலென் விழிக்கிலெ னுணர்வுசென் றொடுங்கிலென்
சிறந்தவைம் புலன்களுஞ் திசைத்திசைக ளொன்றிலென்
புறம்புமுள்ளு மெங்கணும் பொருந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகாள் நினைப்பதேது மில்லையே. (௱௧௩)

ஓதுவார்க ளோதுகின்ற வோரெழுத்து மொன்றதே
வேதமென்ற தேகமாய் விளம்புகின்ற தன்றிது
நாதமொன்று நான்முகன் மாலுநானு மொன்றதே
ஏதுமன்றி நின்றதொன்றை யானுணர்ந்த நேர்மையே. (௱௧௪)

பொங்கியே தரித்தவச்சு புண்டரீக வெளியிலே
[illegible]ங்கியே தரித்தபோது தாதுமா துளையதாம்
[illegible]ங்கியுட் சரித்தபோது வடிவுக ளொளியுமாய்
[illegible]மேல் வடிவுகொண்டு குருவிருந்த கோலமே. (௱௧௫)

மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனெனில்
கண்ணினோடு சோதிபோற் கலந்தநாத விந்துவும்
அண்ணலோடு சத்தியு மஞ்சுபஞ்ச பூதமும்
பண்ணினோடு கொடுத்தழிப் பாரொடேழு மின்றுமே. (௩௧௬)

ஒடுக்குகின்ற சோதியு முந்திநின்ற வொருவனும்
நடுத்தலத்தி லொருவனும் நாடுகாவி லேறியே
விடுத்துநின்ற விருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்
அடுத்துநின் றறிவினோ டணுகிநின்ற வாதியே (௩௧௭)

உதித்தமந் திரத்தினோ டொடுங்குமக் கரத்திலும்
மதித்தமண் டலத்திலே மறைந்துநின்ற சோதிநீ
மதித்தமண் டலத்துளே மறித்துநீ யிருந்தபின்
சிரித்தமண் டலத்துளே சிறந்ததே சிவாயமே. (௩௧௮)

திருத்திவைத்த சற்குருவைச் சீர்பெற வணங்கிலீர்
குருக்கொடுக்கும் பத்தரே கொண்டுநீந்த வல்லிரோ
குருக்கொடுக்கும் பித்தரும் குருக்கொள்வந்த சீடனும்
பருத்திபட்ட பாடுதான் பன்னிரண்டும் பட்டதே. (௩௧௯)

நட்டதா பரங்களும் நயின்றசாத் திரங்களும்
இட்டமான வோமகுண்ட மிசைந்துநாலு வேதமும்
கட்டிவைத்த புத்தகம் கடும்பிதற்றி தப்பெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிராணனா லறியவே. (௩௨0)

ஒன்பதான வாசல்தா னொழியுநா ளிருக்கையில்
ஒன்பதான ராமராம நாமமென்று நாமமே
வன்மமான பேர்கள்வா க்கில் வந்துநோ யடைப்பராம்
அன்பரான பேர்களவா க்கி லாய்ந்தமைந் திருப்பதே. (௩௨௧)

சுழித்தவோ ரெழுத்தையுஞ் சொன்முகத் திருத்தியே
துன்பவின்ப முங்கடந்து சொலலுமூல நாடியுள்
அழுத்தமான வக்கர மங்கியுள் ளெழுப்பியே
ஆறுமங்கை யுட்கலந் தப்புறத் தலத்துளே. (௩௨௨)

விழித்தகண் துதிக்கவும் விந்துநாத வோசையும்
மேருவுங் கடந்தவண்ட கோளமுங் கடந்துபோய்
எழுத்தெலா மறிந்துவிட்ட விந்திரஞால வெளியிலே
யானுநீயு மேகலந்த தென்னதொன்மை யீசனே. (௩௨௩)

ஓம்நமா வென்றுளே யோதுகின்ற யோகியே
வானுடற் கருத்துளே பானையென் றறிந்தபின்
நானுநீயு முண்டடா நலங்குலம துண்டடா
ஊனுமூணு மொன்றுமே யுணர்ந்திடா யெனக்குளே. (௩௨௪)

றவர்க் கன்னதான மீவதாய்
ளாகிநின்ற நாதருக்க தேறுமோ
ஐம்புலனை வென்றிடா தவத்தமே யுழன்றிடும்
ஐம்பருக்கு மீவதுங் கொடுப்பது மவத்தமே. (௫௨௫)

ஆசியான வைம்புலன்க ளவையுமொக்கு ளொக்குமோ
யோனியிற் பிறந்திருந்த துன்பமிக்கு மொக்குமோ
வீணர்காள் பிதற்றுவீர் மெய்மையே யுணர்திரேல
ஊணுறக்க போகமு முமக்கெனக்கு மொக்குமே. (௫௨௬)

ஓடுகின்றவைம்புல னொடுங்கவரு செழுத்துளே
நாடுகின்ற நான்மறை நவிலுகின்ற ஞானிகாள்
கூடுகின்ற கண்டித குணங்களூன் றெழுத்துளே
ஆடுகின்ற பாவையா யமைந்ததே சிவாயமே (௫௨௭)


அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுதேவ ரன்றுரைத்த மந்திரம
சுரியதோ ரெழுத்தையுன்னி சொல்லுவேன் சிவாக்கியம்
தோஷதோஷ பாவமாயகை தூரதூரவோடவே. (௫௨௮)

கரியதோர் முகத்தையொத்த கற்பகத்தைக் கைதொழுக
கலைகள்நூல்கள் ஞானமுங் கருத்திலவங் துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரொலாம
பேயனாகி யோதிடும பிழைபொறுகக வேண்டுமே (௫௨௯)

வாளுறையில் வாளடககம வாயுரையில வாய்வடக்கம்
ஆளுறையில் ஆளடக்கம் அருமையென்ன வித்தைகாண்
தாளுறையில் தாளடக்கம் தன்மையான தன்மையும்
ளடக்கம் நானுநீயுங் கண்டதே (௫௩௦)

## சிவவாக்கியர் பாடல

முற்றிற்று.



உ

கடவுள்துணை.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 10 | இரக்குமாறு | இருக்குமாறு. |
| 4 | 6 | நாதா | நாதன். |
| ஷை | 19 | மிய்யல் | முடலமே. |
| 5 | 17 | சரிதைநில | சரியையிலு. |
| 7 | 23 | [illegible] | நிற்றிரா. |
| ஷை | 34 | உ [illegible] | உடல் மலந்து. |
| 8 | 13 | மா ப் | மாசுப். |
| ஷை | 37 | யேவ்வியாக | டேவியார். |
| 9 | 29 | மருந்தெயேன் | மருந்தேனப். |
| 10 | 9 | யோமசு | யோகொர். |
| 16 | 37 | வெநியா | வேதியா. |
| 17 | 33 | மண்டத்துமே .. | மண்டபத்துளே. |
| 19 | 21 | பண்ணுநீ .. | ஆற்றலே. |
| 25 | 33 | பரபபிரம .. | பரப்பிரம. |